**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 106/2018 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 12.08.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாபு | ஜாதி | : | |
| தந்தை–பெயர் | : | கண்ணப்ப ரெட்டி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

4ம் எதிரி இறப்பு. மற்ற எதிரிகள் ஆஜர.

<u>முதல் விசாரணை</u> :

தற்போது திருத்தனி சன்னதி தெருவில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக லேத் பட்டரை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இறந்த ஆறுமுகம் எனது தம்பி ஆவா்ர. சம்பவத்தை நான் நேரில் பா்ரக்கவில்லை. எனது தம்பி காவல் நியைத்திற்கு எதிரே  இறந்து கிடப்பதாக யா்ர என்று தெரியாது பொது ஜனம் ஒருவ்ர கூறினா்ர. நானும், பெய்ர தெரியாத ஒருவரும் எனக்கு உதவி செய்தா்ரகள். இறந்த எனது தம்பியின் உடலை மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். என் தம்பி இறந்துவிட்டதாக சொன்னா்ரகள். எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தம்பி திருத்தணி நகராட்சியில் 13 வது வார்ட் அ.தி.மு.க கவுண்சிலராக இருக்கிறார் என்றும், திருவள்ளூர் மாவட்ட திட்ட குழு உறுப்பினராகவும் இருக்கிறார் என்றும், திருத்தணி திமுகு இளைஞர் அணியில் இருக்கும் கிரணுக்கும் கட்சி ரீதியாகவும், தொழில் ரீதியாக பிரச்சனை இருந்தது என்றும், மலை புறம்போக்கு இடத்தில் கிரன் ஆக்கிரமித்து மனைகளை

விற்பனை செய்யக்கூடாது என்று சொல்லிவந்தார் என்றும், இது சம்மந்தமாக எனது தம்பியை கிரன் மிரட்டி வந்தார் என்றும், கடந்த 09.10.2016 காலை 7 மணிக்கு என்னுடைய தம்பி கம்பெனியை பார்வையிட 7.45 மணிக்கு அருடைய சொந்தமான TN BA 3663 Scorpiyo காரில் ஏற்றிக்கொண்டு திருத்தணி வரும்போது சோளிங்கர் சாலை புதியதாக கட்டிக்கொண்டிருந்த காவல் நிலையம் அருகே வரும் போது அவர் காரே எதிரே ஜாகீர்ஊசைன் என்பவர் ஆட்டோ ஓட்டி வந்தார் என்றும், அவர்கள் கார் மீது மோதும் போது இடது பக்கமாக காரை நிறுத்தினார்கள் என்றும், ராஜேஷ் மற்றும் அடையாள காட்டக்கூடிய இரண்டு நபர்கள் ஆட்டோவிலிருந்து இறங்கி ராஜேஷ் பிலாஸ்க் கவரை காரின் மீது வீசினார் என்றும், ஜாகீர் அவர் வைத்திருந்த இரும்பு ராடுடன் ராஜேஷ் அவன் கையில் வைத்திருந்த வெட்டி கத்தியுடன் காரின் கண்ணாடியை உடைத்து உள்ளே மிளகாய் பொடி தூவினார்கள் என்றும், காரில் இருந்து தம்பியை இழுத்து போட்டு தலை வெட்டி கிரன் கழுத்தில் கத்தியா வைத்த என்று கூறி வெட்டினார்கள் என்றும், அவர் வெட்டாதே என்றும் கத்திக்கொண்டே ஓடினார் என்றும், அவர்கள் சரமாறியாக வெட்டினார்கள் என்றும், ஆறுமுகம் செத்துட்டானா என்று பார் என்று சொல்லி கொண்டே சொன்னார்கள் என்றும், அங்கிருந்த நாகராஜ், சுரேஷ் வருவதை பார்த்து சென்றுவிட்டார்கள் என்றும், எங்கிட்ட வைத்தால் இப்படி தான் என்று மிரட்டி அவர்கள் வந்த ஆட்டோவில் சென்றுவிட்டார்கள் என்றும், ஆறுமுகத்தை திருத்தணி மருத்துவனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், மருத்துவர்கள் ஆறுமுகம் இறந்துவிட்டதாக கூறினார்கள் என்றும், இது சம்மந்தமாக மேனேஜர் மதன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.08.12 18:26:11 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.